**රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව**

**அரச கணக்குகள் திணைக்களம்**

**Department of State Accounts**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | SA/MAA/GRG/01 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2022.07.08 |

**வழிகாட்டுதல்கள் இலக்கம். *02/2022***
**நி.ஒ.வி. *170 (2)* இன் கீழ் கிடைக்கின்ற பரிசுகளின்/ கொடைகளின் பயன்பாடு மற்றும் கணக்கு வைத்தல்**

**இலங்கை அரசாங்கத்திற்கு உள்நாட்டு நிறுவனங்களினால் நபர்களினால் வழங்கப்படுன்ற பரிசுகளை/ கொடைகளை கணக்கு வைக்க வேண்டிய விதம் பற்றிய வழிகாட்டுதல்கள்**

இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைப்பதற்கு அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இல் உள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருக்கின்ற அதேவேளையில், உள்நாட்டு தனியார் நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் வழங்கப்படுகின்ற கொடைகள் உரிய முறைமைக்கு அமைவாக கணக்கு வைக்கப்படுவதில்லை என்பது திறைசேரியினால் அவதானிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டிலிருந்து கிடைக்கின்ற பரிசுகள் /கொடைகள் சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய செயல் ஒழுங்குகள் நி.ஒ.வி. 170(2) இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் உள்நாட்டிலிருந்து கிடைக்கின்ற பரிசுகளை/ கொடைகளை பயன்படுத்துவதற்கும் கணக்கு வைப்பதற்குமான வழிகாட்டல் கீழே காட்டப்பட்டுள்ளது.

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka.
General - Tel : +94 11 2484500/600 Ext : 1149 Fax : + 94 11 2484869 Website : www.sad.gov.lk
Director General - Tel. :+94 11 2484728 Fax : + 94 11 2473856 E -mail : dgsa@sad.treasury.gov.lk

## 1. காசாகக் கிடைக்கின்ற பரிசுகள்/ கொடைகள்

1.1. குறிப்பிட்ட பணிக்காக என்று விதிமுறைகள் இல்லாமல் அமைச்சுகளுக்கு/ திணைக்களங்களுக்கு காசாக கிடைக்கின்ற பரிசுகள்/ கொடைகள்

இது சம்பந்தமாக கீழே உள்ளவாறு செயற்படுதல் வேண்டும்.

1.1.1. ரூபா ஒரு மில்லியன் வரை -

தொடர்புடைய அமைச்சின்/ திணைக்களத்தின் மூலம் உள்நாட்டுப் பரிசுகளுக்காக/ கொடைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வருமானக் குறியீடாகிய 3001.02.00 இற்கு செலவு வைத்தல் வேண்டும். அதன் பின்னர் 1.1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை தாமதமின்றி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

1.1.2. ரூபா ஒரு மில்லியனுக்கு மேல் -

தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கக்கூடிய விதத்தில் உரிய தொகையை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு காசோலை/ வங்கி வரைவோலை மூலம் அனுப்பீடு செய்தல் வேண்டும்.

இதன்போது தொடர்புடைய நிறுவனத்தில் கணக்குகள் குறிப்பு வைக்கப்படுவது;

**(அ) பரிசு/ நன்கொடைத் தொகை பெறுகை**

வரவு:- காசேடு xxxx

செலவு:- மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்தும் பொருட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் வைப்புக் **கணக்கு** (6000-0-0-013-0-xxx-0) xxxx

**(ஆ) கிடைத்த தொகையை திறைசேரிக்கு அனுப்பீடு செய்தல்**

வரவு:- மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்தும் பொருட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் வைப்பு கணக்கு (6000-0-0-013-0-xxx-0) xxxx

செலவு:- காசேடு xxxx

இதற்காக உரிய செலவு அறிவித்தலை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பியதன் பின்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் தொடர்புடைய தொகை உள்நாட்டுக் கொடை வருமான குறியீட்டு இலக்கத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது.

1.1.3. மேலே *1.1* இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட/ செலவு வைக்கப்பட வேண்டிய பரிசு/ கொடை தொகை பற்றிய பின்வரும் விபரங்களை அனுப்பீடு செய்யப்படுகின்ற காசோலையுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*I.* நன்கொடை செய்தவரின் பெயர் மற்றும் முகவரி
*II.* பரிசு/கொடை தொகையின் பெறுமதி
*III.* அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாயின் அந்தத் திகதி
*IV.* ரூபா ஒரு மில்லியனுக்கும் மேல் திறைசேரிக்கு அனுப்பீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விபரம் (திகதி, காசோலையின் இலக்கம் மற்றும் தொகை)

1.1.4. **ஏதேனும் குறிப்பான பணிக்காக என்ற நியதி இல்லாமல் நியதிச் சட்டமுறை நிறுவனங்களுக்கு காசாகக் கிடைக்கின்ற பரிசு / நன்கொடை**

ஏதேனும் ஒரு நியதிச் சட்டமுறை நிறுவனத்திற்கு (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நாணய சட்டத்தின் II ஆம் பகுதியில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள) கிடைத்த பரிசு/

கொடை சம்பந்தமாக அந்த நிறுவனத்தினால் அந்த தொகை உரிய நிரல் அமைச்சுக்கு அனுப்பீடு செய்யவேண்டிய அதேவேளையில் தொடர்புடைய அமைச்சு அந்த தொகையின் பெறுமதிக்கு அமைவாக மேலே 1.1.1 அல்லது 1.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.2. **ஏதேனும் குறிப்பான பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்று கோரி பரிசாக/ கொடையாக கிடைக்கின்ற தொகை**

1.2.1. தேசிய பாதுகாப்பிற்கு, பொதுமக்களின் அமைதி சீர்குலைவதற்கு அல்லது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு தடையை ஏற்படுத்துகின்ற அல்லது சர்வதேச உறவுகளுக்கு பாதகமான தாக்கத்தை செலுத்துகின்ற விடயங்களுக்கான கொடைகளை பொறுப்பேற்றல் கூடாது.

1.2.2. எதிர்பார்க்கப்படும் பணியை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டினை தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திடமிருந்து நிதியிடல் குறியீட்டு இலக்கம் (11) மற்றும் தொடர்புடைய செலவு விடயத்தின் கீழ் செய்து கொள்ளுதல் வேண்டும். தேவையான கட்டுநிதியை தொடர்புடைய செலவின தலைப்பின் கீழ் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1.2.3. **ஏதேனும் குறிப்பிட்ட பணிக்காக அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு கிடைக்கின்ற ரூபா 01 மில்லியன் வரையான காசு மூலமான பரிசு/கொடை**

(i) தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால் இதற்கான 6000-0-0-019–0-XXX-0 வைப்பு கணக்கிற்கு (வைப்புக் கணக்கு இலக்கம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்) செலவு வைக்க வேண்டிய அதேவேளையில் இந்தப் பணிக்காக


அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம்,கொழும்பு 01, இலங்கை
தொ.பே- 94 11 2484728 தொலைநகல்- 94 11 2473856 / மின்னஞ்சல்- dgsa@sad.treasury.gov.lk

மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் நிதியிடல் குறியீட்டிலக்கம் (11) இன் கீழ் தொடர்புடைய செலவு விடயத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். (இதற்காக தனியான செலவு விடய இலக்கத்தையும் நிதி ஏற்பாட்டையும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்)

இதன்போது தொடர்புடைய நிறுவனத்தின் கணக்கு குறிப்பு வைக்கப்படுவது;

(அ) பரிசு/ கொடைத் தொகை பெறுகை

வரவு:- காசேடு xxxx

செலவு:- 6000-0-0-019-0-XXX-0 -
உள்நாட்டுக் கொடை வைப்பு கணக்கு xxxx

(ஆ) செலவினை மேற்கொள்ளுதல்

வரவு:- தலைப்பு - நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் - xxxx
செலவு விடயம் – விடயம்- நிதியிடல்
குறியீட்டிலக்கம்
செலவு:- காசேடு xxxx

(ii) அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்குரிய கொடை வருமானத்தின் பெறுமதியை கணக்கு வைப்பதற்காக பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின் கையொப்பத்துடன் கீழே (அ) மற்றும் (ஆ) எனக் காட்டப்பட்டுள்ள இரண்டு நாளேட்டு பதிவுகளை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வரவு:- 6000-0-0-019-0-XXX-0 - உள்நாட்டுக் கொடை வைப்பு கணக்கு xxxx

செலவு:- 9212 - உள்நாட்டு கொடைக் கணக்கு xxxx
விபரம் :-


அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம்,கொழும்பு 01, இலங்கை
தொ.பே- 94 11 2484728 தொலைநகல்- 94 11 2473856 / மின்னஞ்சல்- dgsa@sad.treasury.gov.lk

/......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்காக நன்கொடையாக ……………… என்பவரிடமிருந்து (கொடையாளர்) கிடைத்த தொகையில் செலவிடப்பட்ட தொகையை கணக்கு வைத்தல்/

(ஆ) வரவு:- 9212- உள்நாட்டு கொடைக் கணக்கு *xxxx*

செலவு:-3001.02.00 - உள்நாட்டு கொடை
வருமானக் கணக்கு *xxxx*

விபரம் :-

/......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்காக கொடையாக ……………………… என்பவரிடமிருந்து (கொடையாளர்) கிடைத்த தொகையிலிருந்து பயன்படுத்தப்பட்ட தொகையை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்தல்./

1.2.4. **ஏதேனும் குறிப்பிட்ட பணிக்காக அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு கிடைக்கின்ற ரூபா 01 மில்லியனுக்கு மேற்பட்ட காசு மூலமான பரிசு/கொடை**

6000-0-0-019-0-XXX-0 வைப்புக் கணக்கிற்கு (உள்நாட்டு கொடை வைப்பு கணக்கு) செலவு வைப்பதற்கு காசோலை அல்லது வங்கி வரைவோலை (Bank Draft) மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பீடு செய்தல் வேண்டும்.

இதன்போது தொடர்புடைய அமைச்சின்/ திணைக்களத்தின் கணக்குக் குறிப்பு வைக்கப்படுவது;

(அ) பரிசு/ கொடை காசு பெறுகை

வரவு:- காசேடு xxxx

செலவு:- 6000-0-0-013-0-XXX-0 - மூன்றாம் தரப்பினருக்கு xxxx
மீண்டும் செலுத்தும் பொருட்டு தற்காலிகமாக நிறுத்தி
வைக்கும் வைப்பு கணக்கு


அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம்,கொழும்பு 01, இலங்கை
தொ.பே- 94 11 2484728 தொலைநகல்- 94 11 2473856 / மின்னஞ்சல்- dgsa@sad.treasury.gov.lk

(ஆ) **கிடைத்த தொகையை திறைசேரிக்கு அனுப்பீடு செய்தல்**

வரவு:- 6000-0-0-013-0-XXX-0 - மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்தும் பொருட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் வைப்பு கணக்கு xxxx

செலவு:- காசேடு xxxx

மேலே இலக்கம் 1.2.2. இன்படி தொடர்புடைய பணியை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினால் போதுமான வருடாந்த ஏற்பாடுகளை தொடர்புடைய செலவு விடய இலக்கத்தின் கீழ் செய்துகொள்ள வேண்டிய அதேவேளையில் கட்டுநிதியை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பிட்ட செலவு விடயத்தின் கீழ் தொடர்புடைய செலவினத்தை வரவு வைத்ததன் பின்னர் மேலே 1.2.3 (ii) (அ), (ஆ) இன்படி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கொடை வருமானம் கணக்கு வைக்கப்படுகின்ற அதேவேளையில் அதற்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு 01 மாதிரிப் படிவத்தின் மூலம் மூன்றுமாத அறிக்கையை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

1.2.5. **ஏதேனும் குறிப்பிட்ட நியதிச் சட்டமுறை நிறுவனம் ஒன்றுக்கு கிடைக்கின்ற ரூபா 01 மில்லியன் வரையான பரிசாக/ கொடையாகக் கிடைக்கின்ற காசு**

அந்த உரிய தொகையை நிறுவனத்தினால் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கு அனுப்பீடு செய்ய வேண்டிய அதேவேளையில் தொடர்புடைய அமைச்சினால் மேலே 1.2.3.(i) பந்தியின் பிரகாரம் செயற்பட்டு 6000-0-0-019-0-XXX-0 தொகுதியில் வைப்புக் கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும். செலவினத்தை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை அந்த வைப்புக் கணக்கின் மூலம் தொடர்புடைய நிரல் அமைச்சினால் நியதிச் சட்டமுறை நிறுவனத்திற்கு விடுவித்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உண்மையான செலவினத்தை நிதியிடல் குறியீட்டு இலக்கம் (11) இன் கீழ் தொடர்புடைய செலவு விடயத்திற்கு வரவு வைத்து


அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம்,கொழும்பு 01, இலங்கை
தொ.பே- 94 11 2484728 தொலைநகல்- 94 11 2473856 / மின்னஞ்சல்- dgsa@sad.treasury.gov.lk

கொடை வருமானத்தின் பெறுமதியை கணக்கு வைப்பதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின் கையொப்பத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள நாளேட்டுக் குறிப்பை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வரவு :- தலைப்பு - நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் - செலவு xxxx
விடயம்-விடயம்-நிதியிடல்குறியீட்டு இலக்கம்

செலவு :- 9212 - உள்நாட்டு கொடை கணக்கு xxxx

விபரம்:-
/......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்கு கொடையாக ……………………. (கொடையாளரிடமிருந்து) கிடைத்த தொகையில் செலவிடப்பட்ட தொகையை செலவு விடயத்திற்கு கணக்கு வைத்தல்/

(ஆ) வரவு :- 9212 - உள்நாட்டு கொடை கணக்கு xxxx

செலவு:- 3001.02.00 - உள்நாட்டு நன்கொடை
வருமான கணக்கு xxxx

விபரம்:-
/......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்கான கொடையாக ……………………………… என்பவரிடமிருந்து (கொடையாளர்) கிடைத்த தொகையை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்தல்./

### 1.2.6. நியதிச் சட்டமுறை நிறுவனங்களுக்கு கிடைக்கின்ற ரூபா 01 மில்லியனுக்கு மேற்பட்ட பணப் பரிசு/ கொடை

தொடர்புடைய தொகையை வைப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை ஒன்றை அல்லது வங்கி வரைவோலை (Bank Draft) ஒன்றை தொடர்புடைய நிரல் அமைச்சினூடாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பீடு செய்தல் வேண்டும். நிரல் அமைச்சின் மூலம் இதற்காக உரிய செலவு விடயத்தின் கீழ்


அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
செயலகம், கொழும்பு 01, இலங்கை
தொ.பே- 94 11 2484728 தொலைநகல்- 94 11 2473856 / மின்னஞ்சல்- dgsa@sad.treasury.gov.lk

செய்துகொள்ளப்பட்ட ஏற்பாட்டுக்கு உரிய தேவையான கட்டுநிதியை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் தொடர்புடைய அமைச்சுக்கு விடுவிக்கப்படுகின்ற அதேவேளையில் அமைச்சினால் செலவு விடயத்திற்கு வரவு வைத்து தொடர்புடைய நிறுவனத்திற்கு கட்டுநிதியை விடுவித்தல் வேண்டும். கொடை வருமானத்தைக் கணக்கு வைப்பதற்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு 01 மாதிரியின் மூலம் மூன்று மாத அறிக்கை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால்/ பிரதான கணக்காளரினால் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டிய அதேவேளையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் உள்நாட்டு வருமானம் கணக்கு வைக்கப்படுகின்றது.

1.2.7. அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு குறிப்பிட்ட பணிக்காக கிடைக்கின்ற ரூபா 01 மில்லியன் வரையான கொடை நிதியிலிருந்து தொடர்புடைய குறிப்பிட்ட பணி முடிவடைந்ததன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை மீதியாக இருக்குமாயின், அந்தத் தொகையை கொடையாளியிடம் விசாரித்து கொடையாளருக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும் அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். கொடையாளரின் உடன்பாட்டின் அடிப்படையில் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய எஞ்சிய தொகையை உள்நாட்டு கொடைக்கான வருமானத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்காக அதுபற்றி குறிப்பிடப்பட்ட முகப்பு கடிதத்துடன் 6000-0-0-019-0-xxx-0 வைப்புக் கணக்கிற்கு வரவு வைத்து காசோலையின்/ வங்கி வரைவோலையின் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பீடு செய்ய வேண்டிய அதேவேளையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் தொடர்புடைய தொகையை உள்நாட்டு கொடை வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதேபோன்று, அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு குறிப்பிட்ட பணிக்காக கிடைத்த ரூபா 01 மில்லியன் வரையான கொடைகளில் ஏதேனும் ஒரு தொகை எஞ்சி இருக்குமாயின், அத்துடன் கொடையாளரினால் கேட்டுக் கொள்ளப்படும் பட்சத்தில், அந்தத் தொகையை தொடர்புடைய வைப்புக் கணக்கிற்கு வரவு வைத்து காசோலை

மூலம் தொடர்புடைய கொடையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.2.8. அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு மற்றும் நியதிச் சட்டமுறை நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பணிக்காகக் கிடைக்கின்ற ரூபா 01 மில்லியனுக்கு மேற்பட்ட கொடையிலிருந்து தொடர்புடைய பணி முடிவடைந்ததன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை எஞ்சி இருக்குமாயின், அந்த தொகையை கொடையாளரிடம் விசாரித்து கொடையாளருக்குத் திருப்பிச் செலுத்துதல் அல்லது 3001.02.00 ஆம் இலக்க கொடை வருமானக் கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும்.

1.2.9. கொடையை அரசாங்கத்திற்கு வழங்கி 02 வருடங்கள் செல்லும் வரையில் குறிப்பிட்ட பணியை ஆரம்பிப்பதற்கு முடியாமல் போகுமாயின் அதற்கான காரணத்தை கொடையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். தொடர்புடைய பணியை நிறைவேற்ற வில்லையாயின் அல்லது நிறைவேற்ற முடியாவிட்டால் தொடர்புடைய தொகையை கொடையாளரிடம் விசாரித்து மீண்டும் கொடையாளருக்கு திருப்பிச் செலுத்துதல் அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு கொடையாளரின் கோரிக்கை கடிதத்துடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் கேட்டுக் கொள்வேண்டிய அதேவேளையில் அப்போது கொடையாளரின் பெயரில் காசோலையை வழங்குவதற்கு அல்லது செலவினத் தலைப்பு 3001.02.00 இற்கு செலவு வைப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2. காசு தவிர்ந்த ஏனைய விதத்தில் வழங்கப்படுகின்ற கொடைகள்**

(உதாரணம்:- பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் என்ற வகையில்)

இது சம்பந்தமாக பின்வரும் ஒழுங்கு முறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

2.1. **அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு காசு தவிர்ந்த ஏனைய விதத்தில் வழங்கப்படுகின்ற கொடைகள்**

2.1.1. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத கருத்திட்டம் ஒன்றுக்கு நேரடியாக பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்கள் என்ற ரீதியில் உள்நாட்டு நிறுவனங்களினால் அல்லது பொது மக்களினால் உதவி வழங்கப்பட்டவுடன் அந்த விடயங்களுக்கு உரிய ஆவணங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட மேற்சொன்ன கொடையின் ரூபா பெறுமதியை தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால் தீர்மானித்தல் வேண்டும். அந்த பெறுமதிக்கு உரியதாக மதிப்பீடுகளில் நிதியிடல் குறியீட்டு இலக்கம் (11) இன் கீழ் வரவு செலவு ஏற்பாடுகளை செய்துகொள்ளுதல் வேண்டும். (கணக்கு வைக்கும் செயல்முறை 2.1.4 மூலம் காட்டப்பட்டுள்ளது)

2.1.2. பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், சொத்துக்கள் பற்றிய விபரத்தை பொருட் பதிவேட்டில் அல்லது அமைச்சினால்/ திணைக்களத்தினால் மேற்சொன்ன பணியின் பொருட்டு பேணப்பட்டு வருகின்ற வேறு ஆவணம் ஒன்றில் உடனடியாக பதிவு வைத்து தொடர்புடைய ஆவணத்தை இற்றைப்படுத்த வேண்டிய அதேவேளையில் நிதி அல்லாத சொத்துக்களாக புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்குதல் வேண்டும்

2.1.3. மாதாந்த கணக்குப் பொழிப்பில் அல்லது பொருள் பரிமாற்று கட்டளையில் உள்ளடக்கப்பட்ட சகல பொருட்களினதும்,

இயந்திரங்களினதும், உபகரணங்களினதும், சொத்துக்களினதும் கொடையின் பெறுமதி பொருட் பதிவேட்டுக்கு சொத்துக்கள் பதிவேட்டுக்கு அல்லது நிறுவனத்தினால் அதற்காக பேணப்பட்டு வருகின்ற வேறு ஏதேனும் பதிவேட்டுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை கவனத்தில் கொள்வது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட பொருட் பதிவேட்டின் அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தின் பேரேட்டுப் பக்க இலக்கத்தை காட்டுகின்ற சான்றிதழ் ஒன்றை தொடர்புடையபொருள் பரிமாற்று கட்டளைக்கு இணைத்தல் வேண்டும்.

2.1.4. தொடர்புடைய கொடையின் பெறுமதியை கணக்கு வைப்பதற்காக கீழே காட்டப்பட்டுள்ள விவரங்களை பின்னிணைப்பு 02 மாதிரியுடன் காலாண்டு ரீதியாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

*I.* நன்கொடை வழங்குனரின் பெயர் மற்றும் முகவரி
*II.* நன்கொடையாகக் கிடைத்த பொருட்களின் உபகரணங்களின் நிதி ரீதியான பெறுமதி
*III.* கிடைத்த திகதி
*IV.* சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட பொருள் பதிவேட்டின் அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தின் பேரேட்டுப் பக்க இலக்கத்தை காட்டுகின்ற சான்றிதழ்
*V.* நிதியிடல் குறியீட்டு இலக்கம் (11) இன் கீழ் செய்துகொள்ளப்பட்ட தொடர்புடைய செலவு விடயத்தின் எஞ்சியதாக்க் காணப்படுகின்ற ஏற்பாட்டின் அளவு மற்றும் அந்த செலவு விடயத்திற்கு வரவு வைப்பதற்கான உடன்பாடு

மேற்குறிப்பிட்ட விடயங்களை தொடர்புடைய நிறுவனத்தினால் அறிக்கையிட்டதன் பின்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் பின்வரும் விதமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(அ) வரவு:- தலைப்பு -நிகழ்ச்சித்திட்டம் –கருத்திட்டம்- செலவு விடயம் -விடயம் -நிதியிடல் குறியீட்டு இலக்கம் xxxx
செலவு :- 9212 - உள்நாட்டு கொடை கணக்கு xxxx

விபரம் :-

/.......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்கு கொடையாக …………………… (கொடையாளரிடமிருந்து) கிடைத்த பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி/

(ஆ) வரவு :- 9212 - உள்நாட்டு கொடை கணக்கு xxxx

செலவு:- 3001.02.00 - உள்நாட்டு நன்கொடை வருமான கணக்கு xxxx

விபரம் :-

/.......................... (கருத்திட்டத்தின் பெயர்) இற்கு கொடையாக …………………… (கொடையாளரிடமிருந்து) கிடைத்த பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்தல்./

## 2.2 நியதி சட்டமுறை நிறுவனத்திற்கு பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்களாகக் கிடைக்கின்ற கொடைகள்

பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்களாக ஏதேனும் சட்டமுறை நிறுவனத்திற்கு கிடைக்கின்ற கொடைகள் சம்பந்தமாக மேலே 2.1.1 முதல் 2.1.3 வரையான செயல்முறைகளை அந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதான விதத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். தொடர்புடைய கொடையின் பெறுமதி அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவது அவசியமானதாக இருக்கின்றபடியினால் கணக்கு வைப்பதற்காக வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டை தொடர்புடைய அமைச்சினால் செய்து கொள்ளுதல் வேண்டும். தொடர்புடைய நிறுவனத்தினால் கொடையின் பெறுமதியை அமைச்சுக்கு உறுதிப்படுத்தி அனுப்பியதன் பின்னர்

அமைச்சினால் செலவின தலைப்புக்கு வரவு வைப்பதற்கான உடன்பாட்டுடன் மேலே 2.1.4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்னிணைப்பு 02 மாதிரி படிவத்துடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் தொடர்புடைய கணக்கு குறிப்பு வைக்கப்படுகின்றது.

2.2.1. ஏதேனும் குறிப்பிட்ட அல்லது குறிப்பானதாக அல்லாத ஒரு கருத்திட்டத்திற்கு நேரடியாக பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக நியதிச் சட்டமுறை நிறுவனத்திற்கு கொடையாக கிடைக்கின்ற பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் அல்லது சொத்துக்களை அந்த நியதிச் சட்டமுறை நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தொடர்புடைய அமைச்சினாலேயே அந்தப் பொருட்களை, இயந்திரங்களை, உபகரணங்களை அல்லது சொத்துக்களை நியதிச் சட்டமுறை நிறுவனத்திற்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. இந்த வழிகாட்டலின் ஏற்பாடுகள் 2022.08.01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

ஒப்பம்:- டபிள்யூ.ஏ. சமன்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்

பிரதி:

01. கணக்காய்வாளர் நாயகம்

பின்னிணைப்பு 01

பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள்

**.............................. ஆம் திகதியுடன் முடிவுற்ற காலாண்டில் உள்நாட்டு கொடைகள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினம் பற்றிய கூற்று**

| மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றிய விபரம் | | | | | | மேலதிக ஏற்பாடு அல்லது நி.ஒ.வி. 66 இன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா | திறைசேரிக் குறிப்பு | | பற்று வைக்கப்பட்ட செலவினம் ரூபா | | கொடைக் கணக்கின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவினத் தலைப்பு | நிகழ்ச்சித் திட்டம் | கருத்திட் டம் | செலவின க் குறியீடு | நிதியிடல் குறியீடு | ஏற்பாடுகள் ரூபா | | இலக்கம் | திகதி | | | |
| | | | | | | | | | | | |

திகதி:

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
அமைச்சின் / திணைக்களத்தின் பெயர்:

**பின்னிணைப்பு 02**

பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள்

**............................... ஆம் திகதியுடன் முடிவுற்ற காலாண்டுக்காக பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்களாக கிடைத்த உள்நாட்டுக் கொடைகளுக்காக திறைசேரியின் கொடைக் கணக்கிற்கு வரவு வைக்கவேண்டிய பெறுமதி பற்றிய கூற்று**

| மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றிய விபரம் | | | | | | ஏற்பாடுகளுக்கு பற்று வைத்து கொடைக் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டிய பெறுமதி ரூபா | கிடைத்த விடயங்கள் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| செலவினத் தலைப்பு | நிகழ்ச்சித் திட்டம் | கருத்திட்டம் | செலவினக் குறியீடு | நிதியிடல் குறியீடு | ஏற்பாடுகள் ரூபா | | |
| | | | | | | | |

மேற்குறிப்பிட்ட காலாண்டில் கிடைத்த பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் அலுவலகத்தில் பேணப்பட்டுவருகின்ற பொருட் பதிவேட்டில் / நிலையான சொத்துக்கள் பதிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி:

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
அமைச்சின் / திணைக்களத்தின் பெயர்: